

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாவட்ட தலைவர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி ஏற்பாட்டில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பேரணியை குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் கழக தீர்மானக்குழு தலைவர் மீ.அ.வைதியலிங்கம், மாநில மருத்துவ அணி தலைவர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, மாநில மருத்துவ அணி செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதல்வர் கழக தலைவரின் ஆணையின்படி, தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் ”ஓரணியில் தமிழ்நாடு இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்ச்சி முகாம் திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி தொகுதி பூவிருந்தவல்லி சடையப்ப மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், புதியதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வளைதளமுகவர்கள் (BDA). மற்றும் பாகமுகவர்கள் (BLA2) தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் அனைவரும் இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்த காணொளி திரையிடப்பட்டு இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, மா.இராஜ், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், ப.ச.கமலேஷ், ஜி.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், தி.வே.முனுசாமி, டி.தேசிங்கு, ஜி.ஆர்.திருமலை, ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், டி.முரளிகிருஷ்ணன், கே.சுரேஷ்குமார், ஆர்.பிரவீன் குமார், சங்கீதா சீனிவாசன், டி.குமரேசன், துர்கா பிரசாத், உள்பட கழக நிர்வாகிகள் BIA 2 BLC, BLD பாக முகவர்கள் உள்ளனர்.

### ஒன்றிய அரசு மண்ணெண்ணெய் அளவை உயர்த்தி வழங்க வேண்டும்!

# தமிழகத்தின் இனம், மொழி, கலாச்சாரத்திற்கு அநீதி இழைக்கும் பா.ஜ.க. அரசு!

## கிருஷ்ணகிரியில் அமைச்சர் அர.சக்கரபாணி பேட்டி!

கிருஷ்ணகிரி, ஜூலை 3-

தமிழகத்தின் இனம், மொழி, கலாச்சாரத்திற்கு அநீதி இழைக்கும் பா.ஜ.க. அரசை எதிர்த்தே 2026 தேர்தல் பரப்புரை, தமிழகத்திற்கு குறைத்து வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் மீண்டும் உயர்த்தி வழங்க மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம் என்று கிருஷ்ண கிரியில் அமைச்சர் அர.சக்கர பாணி பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் தமிழக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு என்னும் சிறப்பு திட்டத்தின் மூலம் மத்திய பா.ஜ.க. அரசு தமிழகத்தின் இனம், கலாச்சாரம், மொழி, தொன்மை, போன்றவற்றை அழிக்கும் நோக்கில் தொடர்ந்து அநீதி இழைக்கும் பாஜக அரசுக்கு எதிராக தமிழக மக்களை ஓரணியில் இணைக்கும் முயற்சியில் ஈடுப்பட்டு வருகிறோம். இதன் மூலம் ஒவ்வொரு வாக்கு சாவடிகளாக மக்களை சந்தித்து கடந்த நான்காண்டுகளில் மத்திய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த குடியுரிமை திருத்த சட்டம், முத்தலாக் திருத்த சட்டம், புதிய கல்விக் கொள்கை, போன்ற மக்கள் விரோத திட்டங்களை எடுத்துரைத்து பரப்புரை செய்து தீவிர உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட உள்ளோம். 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் ஒட்டுமொத்தமாக பா.ஜ.க.விற்கு எதிராக பரப்புரை மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டார்.



தொடர்ந்து பேசிய அமைச்சர், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தமிழகத்தில் என்டிஏ கூட்டணி ஆட்சி அமையும் என கூறுகிறார், எடப்பாடி பழனிச்சாமி அ.தி.மு.க. தலைமையில் ஆட்சி என குறிப்பிடுகிறார். அவர்களுக்குள் குழப்பம் நிலவுகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தூத்துக்குடியில் போராட்டம் நடத்திய 13 பேரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற அரசு அ.தி.மு.க. ஆட்சி. தற்போது சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பகுதியில் விசாரணை கைதி உயிரிழப்பு சம்பவத்தில் தமிழக முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுத்து காவலர்களை கைது செய்துள்ளார். தமிழகத்தில் கிருஷ்ணகிரி உட்பட பல இடங்களில் மா சாகுபடி அதிகரித்துள்ளதால் விலை குறைத்துள்ளது. முதலமைச்சர் எழுதிய கடிதத்துடன் மத்திய அமைச்சரை சந்தித்தோம். 91 கோடி ரூபாய் நிவாரணம் கேட்டுள்ளோம். ஒன்றிய அரசு தருவதாக உறுதி அளித்துள்ளனர். நிதி ஆதாரம் கிடைத்தவுடன் நிவாரணம் வழங்கப்படும். ஒன்றிய அரசு தமிழகத்திற்கு ஆண்டுதோறும் ஒதுக்க வேண்டிய மண்ணெண்ணெய் அளவு கடந்த காலங்களில் குறைக்கப்பட்டு இருந்தது. தொடர்ந்து தமிழக அரசு ஒன்றிய அரசை வலியுறுத்தியதின் பேரில் தற்போது சற்று கூடுதலாக வழங்கப்படுகிறது.

திமுக ஆட்சி பொறுப்பேற்றுடன் 8 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு தமிழகம் வளர்ச்சி அடைந்த மாநிலம் என்பதால் மண்ணெண்ணெய் அளவு குறைக்கப்பட்டு 1,000 முதல் 2,000 கிலோ லிட்டராக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. தற்போது சற்று கூடுதலாக மத்திய அரசு சார்பில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டாலும், தமிழகத்திற்கு முந்தைய காலங்களில் ஒதுக்கியது போல் 8 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளோம் என தெரிவித்தார்.

இந்த பேட்டியின் போது கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ, மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், கிழக்கு மாவட்ட அவை தலைவர் நாகராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.


ஆசிய சர்வதேச ஊழியர்கள் ஐக்கியங்களின் நிறுவனரும் குரோம்பேட்டை புது வாழ்வு ஜேம்ஸ் பேராலயம் ஸ்தாபகரும் தமிழ் கிறிஸ்தவ உலகின் முப்பெரும் தலைவருமான பேராயர் தயானந்தன் இயற்கை யெய்தினார். குரோம்பேட்டை நியூ காலனியில் உள்ள புது வாழ்வு பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருஉடலுக்கு சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் நேரில் சென்று மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள் மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதிச் செயலாளர் இ. எஸ்.பெர்னார்ட் மாங்காடு ஜெபருல்லா ஆகியோர் உடன் இருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருச்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ஆர்.கார்த்திக் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 07.07.2025 | முசிறி நகரம் | மேல சாலியத் தெரு, முசிறி. | சீனி விடுதலை அரசு<br>ந.காருண்யா |
| 2 | | முசிறி நகரம் | கீழ சந்தப்பாளையம் | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>அ.சுஹாசினி |
| 3 | 08.07.2025 | தொட்டியம் பேரூர் | வாணப்பட்டறை | துரை பாண்டியன்<br>ரா.சிந்துநதி |
| 4 | | தொட்டியம் கிழக்கு ஒன்றியம் | மணமேடு ஊராட்சி | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>மு.ராமமூர்த்தி |
| 5 | | தாத்தையங்கார்பேட்டை மேற்கு ஒன்றியம் | நீலியாம்பட்டி ஊராட்சி | பவித்ரம் கண்ணன்<br>ஐ.பாலகணபதி |
| 6 | 10.07.2025 | சா.கண்ணனூர் பேரூர் | சமயபுரம் கடைவீதி | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>ர.சிந்துநதி |
| 7 | | தாத்தையங்கார்பேட்டை பேரூர் | கலைஞர் திடல், கடைவீதி. | துரை பாண்டியன்<br>அ.விஜலெட்சுமி |
| 8 | | மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றியம் | தத்தமங்கலம் ஊராட்சி, தேவிமங்கலம். | நாமக்கல் ராஜகோபால்<br>ரா.கனிமொழி |
| 9 | | முசிறி மேற்கு ஒன்றியம் | கோமங்கலம் ஊராட்சி | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>ந.காருண்யா |
| 10 | 11.07.2025 | மேட்டுப்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>அ.விஜலெட்சுமி |
| 11 | | தாத்தையங்கார்பேட்டை கிழக்கு ஒன்றியம் | சிட்லரை ஊராட்சி | நாமக்கல் ராஜகோபால்<br>ர.சிந்துநதி |
| 12 | | துறையூர் நகரம் | வடக்குத்தெரு, நான்கு சாலை. | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>ந.காருண்யா |
| 13 | 12.07.2025 | மண்ணச்சநல்லூர் பேரூர் | எதுமலை பிரிவு சாலை | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>அ.விஜயலெட்சுமி |
| 14 | | மண்ணச்சநல்லூர் மத்திய ஒன்றியம் | மாரியம்மன் கோயில் அருகில், வாழையூர் ஊராட்சி. | பவித்ரம் கண்ணன்<br>த.குமரவேல் |
| 15 | | மண்ணச்சநல்லூர் மேற்கு ஒன்றியம் | திருப்பைஞ்ஞீலி ஊராட்சி கடைவீதி | மணப்பாறை காசிராஜன்<br>ஐ.பாலகணபதி |
| 16 | | துறையூர் கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், குன்னுப்பட்டி. | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>ந.காருண்யா |
| 17 | 15.07.2025 | துறையூர் மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், கோணப்பாதை. | துரை பாண்டியன்<br>ந.காருண்யா |
| 18 | | காட்டுப்புதூர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், காட்டுப்புத்தூர். | நாமக்கல் ராஜகோபால்<br>சை.சேக் அலிமாஸ் அலி |
| 19 | | தொட்டியம் மேற்கு ஒன்றியம் | மேய்க்கல் நாயக்கன்பட்டி கடைவீதி | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>த.குமரவேல் |
| 20 | 16.07.2025 | உப்பிலியபுரம் வடக்கு ஒன்றியம் | நாகநல்லூர் ஊராட்சி | மு.விஜய ரெத்தினம்<br>ரா.சிந்துநதி |
| 21 | | உப்பிலியபுரம் பேரூர் | ஈச்சம்பட்டி | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>ந.காருண்யா |
| 22 | 17.07.2025 | துறையூர் மேற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், திருமானூர். | துரை பாண்டியன்<br>சை.சேக் அலிமாஸ் அலி |
| 23 | 20.07.2025 | உப்பிலியபுரம் தெற்கு ஒன்றியம் | பச்சைபெருமாள்பட்டி ஊராட்சி, நெட்டவேலம்பட்டி. | துரை பாண்டியன்<br>அ.விஜயலட்சுமி |
| 24 | | பாலகிருஷ்ணம்பட்டி பேரூர் | பி.மேட்டூர் | மணப்பாறை காசி ராஜன்<br>ரா.சிந்துநதி |
| 25 | | முசிறி கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, கரட்டாம்பட்டி. | சீனி விடுதலை அரசு<br>ப.வெங்கடேஷ் |

திருச்சி
நாள் : 02.07.2025

கலைஞர் 100
1924 - 2023





திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் காங்கிரஸ் மாநில பொதுக்குழு உறுப்பினர் வினோத்குமார் மற்றும் 20க்கும் மேற்பட்ட அதிமுக கிளை கழக செயலாளர்கள் ஆண்டார் மடம், நெய்தவாயல் பழவேற்காடு, திருப்பாலைவனம், பகுதிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர்கள் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கழக தலைவர் புகைப்படத்தை வழங்கினார் உடன் நிர்வாகிகள் உள்ளனர்